# தளபதி கிட்டுவை இந்தியா வழி மறித்தது ஏன்?

## தீருவில் அஞ்சலிக்கூட்டத்தில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதி கேணல் கிட்டு தம்முடன் எடுத்து வந்த தீர்வுத் திட்டம், யோசனை என்ன? இது பற்றிய விபரத்தை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தீருவிலில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் பகிரங்கப்படுத்தினார்.

கேணல் கிட்டு கொண்டு வந்த தீர்வுத்திட்டம் உருவான விதம், அதன் பின்னணி ஆகியவற்றை கலாநிதி பாலசிங்கம் அங்கு விளக்கினார். அவர் கூறியதாவது:

ஐரோப்பாவில் கிட்டு மற்றும் திலகர் ஆகியோருடன் பேச்சு நடத்திய மேற்குலக சமாதான அமைப்பான குவாக்கர்ஸ் குழுவின் பிரதிநிதிகள், பின்னர் சிறீலங்கா அரசின் உயர்மட்ட அமைச்சர்களுடனும் பேசிவிட்டு இங்கு வந்தார்கள். சமாதானம் ஏற்பட பேச்சு நடத்த மேற்கொள்ளப்பட வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகள் பற்றி அவர்கள் எங்களுடன் பேசினார்கள். இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை எங்கே நடத்துவது? யாருடன் நடத்துவது? என்ன அடிப்படையில் பேசுவது? என்பன போன்ற விடயங்கள் அப்போது ஆராயப்பட்டன. கொழும்புக்குச் சென்று பேசமுடியாது என நாம் கூறினோம். சிங்கள இராணுவத்தை நம்ப முடியாது என்றோம். அதனையடுத்து வெளிநாடு ஒன்றின் தலைநகரில் பேசுவதற்குத் திட்டமிடப்பட்டது.

புலிகளின் தரப்பில் தளபதி கிட்டு, திலகர் ஆகியோருடன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளும் பங்குபற்றலாம் என முடிவானது. எதைப்பற்றி பேசுவது என்பது குறித்து பிரச்சனை எழுந்தது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகத்தை ஏற்பதற்கு மறுக்கும் சிங்கள அரசுடன் பேசுவதா? சமஸ்டி முறையைப் பற்றிப் பேசுவதா? அப்படியாயின் எத்தகைய சமஸ்டி முறையைப் பற்றிப் பேசுவது? போன்ற பிரச்சனைகள் எழுந்தன.

சிங்கள அரசு உருப்படியான யோசனை எதையும் தரவில்லை. இந்நிலையில் நாம் எமது தரப்பில் யோசனை ஒன்றை வெளியிட்டோம். இடைக்காலத் தீர்வாக யுத்த நிறுத்தம் இரு தரப்பும் செய்வோம் என நாம் கூறினோம். மக்கள் கஸ்டங்கள் நீங்கி நிம்மதியாக வாழ முதலில் வழி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டோம். அரசு சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தி மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவது அவசியம் என்பதைச் சுட்டிக் காட்டினோம். சில இடங்களில் படைகளை சிறீலங்கா அரசு வாபஸ் பெற வேண்டும்; குடியேற்றப் பிரதேசங்களில், போக்குவரத்திற்குத் தடையாக உள்ள பகுதிகளில், குடாநாட்டை முற்றுகையிட்டுள்ள பகுதிகளில் இருந்து படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்று குறிப்பிட்டோம்.

அதன் பின்னர் விடுதலைப் புலிகளின் கீழ் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு இடைக்கால நிர்வாக ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும் என்றும் அக்காலப் பகுதியில் தமிழீழ மக்களுக்குரிய நிவாரணம், அவர்களின் புனர்வாழ்வு உட்பட சகல வசதிகளையும் செய்து கொடுத்து அவர்களின் துன்பத்தைப் போக்கி அவர்களின் நல்லெண்ணத்தை, நம்பிக்கையை அரசு பெற வேண்டும் என்றும் -

அதற்கு முன்னர் ஒரு தீர்வுத்திட்டத்தைப் பற்றி நாம் பேசமுடியாது என்பதை வலியுறுத்தினோம்.

ஆகவே நாம் குறிப்பிடுவது போல சமாதான ஒழுங்கு ஒன்றைக் கொண்டு வாருங்கள்; நாங்கள் ஒத்துழைக்கிறோம், போர் நிறுத்தத்திற்கு நாங்கள் தயார் என்று குறிப்பிட்டோம். இதுபற்றி ஐரோப்பிய நாடு ஒன்றின் தலைநகரில் பேசுவமே என குவாக்கர்ஸ் குழுவிடம் தெரிவித்தோம். அவர்கள் இது பற்றி கொழும்பில் சிங்கள அரசுடனும் சில ஐரோப்பிய நாடுகளுடனும் பேசினர்.

இனப்பிரச்சனைக்கு உடனடியாகத் தீர்வு காணமுடியாது என்றும், முன்பு இலங்கை -இந்திய உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து சிபார்சு வடிவத்தில் இடைக்கால நிர்வாக ஒழுங்கு அவசியம் என்றும் விடுதலைப் புலிகள் கூறுவது சரியானதே என்றும் அந்நாடுகள் ஒப்புக் கொண்டன.

இதன் பின்னர் குவாக்கர்ஸ் குழு தளபதி கிட்டு, திலகர் ஆகியோருடன் தொடர்பு கொண்டது. புலிகளின் யோசனையை ஐரோப்பிய நாடுகள் ஓரளவிற்கு நல்ல யோசனையாகக் கருதின. ஆகவே இதைப்பற்றிப் பேசவேண்டும் எப்படிப் பேசுவது? எங்கே பேசுவது? என்ற பிரச்சனை எழுந்தது. இங்கிருந்து நாம் யாராவது இங்கிலாந்திற்கு கப்பலில் போவதனால் காலதாமதம் ஆகும். விமானம் மூலம் போவதானால் நாம் கொழும்பு செல்ல வேண்டும். அதுசாத்தியமல்ல; அதனால் எமது பிரதிநிதிகளை இந்தியாவுக்கு வருமாறும் அங்கிருந்து இலண்டனுக்குச் செல்லலாம் என்றும் குவக்கர்ஸ் அறிவித்தது.

நாம் இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் இந்த சமாதானத் திட்டத்தின் விவகாரங்கள், அது பற்றி சிறீலங்கா அரசின் நிலைப்பாடு மேற்கத்திய ஐரோப்பிய நாடுகள் என்ன கருதுகின்றன. இங்கிலாந்தில் இதுபற்றிப் பேசுவதற்கான சூழ்நிலை எப்படி இருக்கிறது என்பது பற்றி அங்கிருந்து சில விபரங்கள் எங்களுக்குத் தேவைப்பட்டன. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு குறியீட்டு வார்த்தைகள் மூலம் (Code word) அங்கிருந்து இதுபற்றி அறிவிக்க முடியாது.

இதனால் தான் இந்த முழுவிபரங்களையும் தம்முடன் கொண்டு கிட்டு இங்கு புறப்பட்டார்.



இதுபற்றிய முழுவிபரமும் இந்தியாவுக்குத் தெரியும். குவக்கர்ஸ் சமாதானக்குழு ஒருவார காலம் புது டில்லியில் தங்கி நின்று வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளை கண்டு பேசி விளக்கமளித்திருந்தது. அப்போது விடுதலைப் புலிகளின் போக்குவரத்திற்கு உத்தரவாதம் அளிப்பதாக இந்தியா குவக்கர்ஸ் குழுவிடம் வாக்குறுதி அளித்தது.

இந்தியாவின் உதவியுடன் நாம் வெளிநாடு சென்று வரவும், எங்களின் போக்குவரத்துக்கு உதவி செய்யவும் இந்தியா இணங்கியதாக குவக்கர்ஸ் குழு எங்களிடம் கூறியது. எங்களிடம் அதற்கான ஆவணச்சான்றுகள் இருக்கின்றன.

உண்மையில் ஐரோப்பிய தலையீட்டை இந்தியா விரும்பவில்லை.

ஆகவேதான் இந்தப் பேச்சும் பகிரங்கமாக இருக்கவேண்டும்; உத்தியோக பூர்வமாக இருக்க வேண்டும்; வெளிநாட்டுத் தலைநகர் ஒன்றில் அந்த நாட்டின் மத்தியஸ்தத்துடன் நடக்க வேண்டும் எனவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கோரிக்கை விடுத்தார். இராணுவத்தைச் சமாளிப்பதற்காக சிறீலங்கா அரசு இப்பேச்சை இரகசியமாக வைத்திருக்க விரும்பியது. பிரிட்டனும் இரகசியத்தையே விரும்பியது. எல்லோரும் இரகசியம் என்று குறிப்பிட்டது எமக்குச் சந்தேகத்தைக் கொடுத்தது. ஆகவே கிட்டு இங்கு வந்து எங்களுக்கு முழு விபரத்தையும் தந்தால் நாம் இதுபற்றி ஆழமாகச் சிந்தித்து முடிவு செய்யலாம் எனக் கருதினோம். எனவே இப்படியான தகவல்களுடன்தான் கிட்டு புறப்பட்டார். இருந்தும் இந்த சமாதான முயற்சியை -ஐரோப்பிய சமாதான முயற்சியை -குழப்ப வேண்டும் என்பதற்காக கிட்டுவை இந்தியா தடுத்து நிறுத்தியது.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் -புரட்சி வெடித்து தமிழீழம் உருவாகினால் அதன் எதிர்விளைவாக இந்திய சாம்ராஜ்யம் சரிந்து விடுமோ என்றும் -
தமிழீழத்தைப் பின்பற்றி இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினால் நாடு உடையுமோ என்றும் இந்தியா அஞ்சுகிறது. இதனால்தான் இந்தியா எமது விடுதலைப் போராட்ட விடயத்தில் மோசமாக வெறிகொண்டு நடக்கிறது. இவ்வாறு திரு. பாலசிங்கம் கூறினார். ■

## பன்முகப்பட்ட ....

மக்களின் மீது அவர் ஆழ்ந்த பற்று வைத்திருந்தார். இராணுவக் கெடுபிடிகள், பொருளாதாரத்தடை, போக்குவரத்துத் தடை போன்ற அழுத்தங்கள் தமிழீழ மக்கள் மீது திணிக்கப்படும்போதெல்லாம் அவர் வேதனைப்பட்டார். ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் இடம்பெயரும் மக்களின் நிலை குறித்து கவலை கொண்டார். இளவாலை, மாதகல் பகுதிகளில் சிறீலங்கா இராணுவம் முன்னேறி வந்தபோது கீழே குறிப்பிட்டவாறு அவரது சிந்தனை வெளிப்பட்டது.

இடம்பெயர்ந்து அகதிகளாகும் சனங்களைப் பொறுத்தவரையில் மிக முக்கிய கவனம் செலுத்தப் பட வேண்டும். எமது அமைப்பின் மாணவர், மகளிர், அரசியல், கலை கலாச்சார... இப்படியான எல்லாப் பிரிவினரும் இராணுவப் பிரச்சனையால் இடம்பெய ரும் சனங்களின் விடயத்தில் உடனடியாகவும் அதிகமாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

போராட்ட உச்சக் கட்ட வேளையில்கூட பொதுமக்களை அதன் தாக்கம் பாதிக்காத வகையில் நாம் பல விடயங்களை திட்டமிட்டுச் செய்ய வேண்டும்.

சமயம் கிடைக்கும் போதெல்லாம் சனங்கள் சந்தோசமாக இருக்கக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்குதல், விழாக்கள், திருவிழாக்கள் போன்று பல விடயங்களை நாமே ஊக்குவிக்கலாம்.

அதேவேளை சனங்களைப் போராட்டத்துடன் ஒன்று திரட்டுவதற்கான திட்டங்களையும் போட வேண்டும்.

வெளிநாட்டில் இருந்து அவர் நிம்மதியாக வேலை செய்ய இந்ததிய அரசு விடவில்லை. அவர் எழுதிய மடல் ஒன்றில் இருந்து இது வெளிப்படுகிறது.

"நான் நலம். நாடுநாடாக ஓடிக் கொண்டிருக்கிறேன். பாரத மாதாவின் புண்ணியத்தால் பல நாடுகளுக்கு விரட்டப்படுகிறேன். இருந்தும் நலம்."

மேற்குலக நாடுகளில் கூட இந்தியாவின் அழுத்தங்கள் எவ்வளவு தூரம் பாய்ந்துள்ளது என்பதை இந்த வரிகள் விபரிக்கின்றன.

இத்தனை கெடுபிடிகளுக்கு மத்தியிலும், மேற்கு நாடுகளில்கூட வெளிப்படையாக உலாவ முடியாத நிலையிலும், அவர் பல மேற்கு நாடுகளுடனும், மனித உரிமை அமைப்புகளுடனும், அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். பல விடுதலை அமைப்புக்களுடனும், பல அரசியல் கட்சிகளுடனும் உறவுகளை வளர்த்துக் கொண்டார். சிறீலங்கா அரசின் கெடுபிடியான இராணுவ நடவடிக்கைகளிற்கும், பொருளாதார நெருருக்கடிகளுக்கும் போக்குவரத்துத் தடை போன்ற இறுக்கங்களுக்கும் தமிழீழ மக்கள் முக்ம் கொடுப்பதை நன்குணர்ந்து கொண்டார். மக்களின் இன்னல்களையும், - துன்ப துயரங்களையும் நன்கு புரிந்து கொண்டதால் மேற்குலக நாடுகளுடனும் பல்வேறு மனித உரிமை அமைப்புக்களுடனும் கலந்துரையாடி விவாதித்து சமாதானத்திட்டமொன்றைத் தயாரித்துக் கொண்டார். இதனை எடுத்துக் கொண்டு தாய் நாட்டின் மீது காலடி எடுத்து வைக்க வேண்டுமென்ற துடிப்புடன் இருந்தார். அவரது துடிப்பு இவ்வாறு வெளிப்பட்டது.

"எப்போது எம்மண்ணிலே கால் வைப்பேன் என்று ஒவ்வொரு கணமும் ஏங்கிக் கொண்டிருக்கிறேன். எனது தாயகத்திலே எங்கேயாவது ஒரு மூலையிலேனும் என்ன வேலையாவது செய்து கொண்டிருந்தாலே அது மனதிற்கு முழு அமைதியைக் கொடுக்கக்கூடியது.

இங்கு இவ்வளவு காலமும் தமது முகவரிகளைத் தொலைத்து விட்ட எமது மக்களின் மத்தியிலும் இப்போது நாடிருந்தும் நாடோடியாக ஓடுகிறேன்.

தனக்கென்று ஒரு சுதந்திர நாடு அமையும்போதுதான் ஒவ்வொரு தமிழனும் தலைநிமிர்ந்து வாழ முடியும். என்னால் வெளிநாடுகளில் வாழ முடியவில்லை. எனது சுபாவம் அப்படி. இப்போதுான் புரிகிறது. நாம் எமது மக்களையும், மண்ணையும் எவ்வளவு தூரம் நேசிக்கிறோம் என்பது. இன்னும் எத்தனையோ பிறவிகள் எடுத்தாலும் எனது மக்களுக்கும், மண்ணுக்கும் சேவை செய்யும்பேறு எனக்குக் கிடைக்க வேண்டும். நாம் எமது மண்ணின் ஒவ்வொரு அங்குலத்திற்கும் போரிட்டவர்கள். ஒவ்வொரு வீட்டையும் பிடிப்பதற்காகப் போரிட்டவர்கள் எப்படி இம்மண்ணைப் பிரிந்து வாழ முடியும்?..."

நிச்சயமாக இந்த மக்களையும், மண்ணையும் பிரிந்து வாழ கிட்டண்ணாவினால் முடியாது. இதனால்தான் சமாதானத்திட்டத்துடன் புறப்பட்டு வந்தார். அந்தச் சமாதானப்புறாவை இந்திய ஆதிக்கக்கரங்கள் மரணப் பொறிக்குள் வீழ்த்தியது.

எமது விடுதலைப் போராட்டத்தில் உள்ள தர்மமும், உண்மையும் நிச்சயமாக இதற்குப் பதில் சொல்லும்...... ■

## யுத்த சூழலிலும் 12 மாணவர்களுக்கு 4'A'

யாழ் குடாநாட்டில் யுத்த சூழலுக்கு மத்தியிலும் 12 மாணவர்கள் க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் 4 பாடங்களிலும் அதி விசேட சித்தி (A) பெற்றுள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரி அதி சிறந்த பெறுபேறுகளை பெற்ற கல்லூரி என்ற பெருமையைத் தட்டிச் செல்கின்றது. இக்கல்லூரியில் 3 மாணவர்களுக்கு 4 பாடங்களில் அதி விசேட சித்தி கிடைத்துள்ளது.